# THE COVAI MAIL

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 51 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 20-26, 2022, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-


## எஸ்.என்.எஸ் மருந்தியல் கல்லூரி

# சிந்தனையும், முயற்சியும் சங்கமிக்கும் இடம்

**தி கோவை மெயில்**

கோவை, சரவணம்பட்டியில் அமைந்துள்ள எஸ்.என்.எஸ் மருந்தியல் மற்றும் சுகாதார அறிவியல் கல்லூரியில், வடிவமைப்பு சிந்தனை எனப்படும் டிசைன் திங்கிங் மூலம் முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு தொழில்முனைவு சிறப்பு பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

இந்த பயிற்சி முகாமானது எஸ்.என்.எஸ் முன்னாள் மாணவர்களின் அமைப்பான டிதி யூத் விங்ஸ் மற்றும் எஸ்.என்.எஸ் இன்னோவேஷன் ஹப் மூலமாக மார்ச் 2 முதல் 7 ஆம் தேதி வரை நடத்தப்பட்டது. இந்த முகாமில் 200 மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். மருத்துவத்துறை மற்றும் மக்களின் அன்றாட வாழ்வில் சந்திக்கும் பல பிரச்சனைகளுக்கு மாணவர்கள் தீர்வுகளை கண்டுபிடித்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் கூறுகையில், கல்லூரி விடுதியில் மாணவராக இருந்தபோதே தன் சிந்தனையும் முயற்சியும் ஒருங்கிணைத்து ஃபேஸ்புக் அற்புதத்தை உருவாக்கினார் மார்க் ஜூக்கர்பெர்க். அதேபோன்று இந்த பயிற்சி முகாம் மூலமாக மாணவர்கள் தங்கள் சிந்தனையையும் முயற்சியையும் ஒருங்கிணைக்க முகாம் உதவியது என்றும் அதன் மூலமாக மாணவர்கள் பல அற்புத கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளனர் என்று கூறினர்.

இந்த பயிற்சி முகாமில் பங்கு கொண்ட மாணவர்கள் கூறுகையில், நாங்கள் இந்த பயிற்சி முகாமின் மூலமாக, எவ்வாறு மக்களின் மனநிலையில் இருந்து ஒரு பிரச்சினையை பார்க்க வேண்டுமென்றும் மற்றும் எவ்வாறு அவர்களுக்கு ஏற்றவாறு ஒரு தீர்வை உருவாக்க வேண்டும் என்றும் கற்றுக் கொண்டோம் மேலும் எப்படி தொழில்முனைவு திட்டங்களை உருவாக்க கற்றுக் கொண்டோம் என்று கூறினர்.

நிகழ்ச்சியின் நிறைவாக 16 புதிய கண்டுபிடிப்புகளை மாணவர்கள் காட்சிப்படுத்தினார்கள். இப்பயிற்சி முகாமில், எஸ்.என்.எஸ் கல்வி குழுமத்தின் முதல்வர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



பயிற்சி முகாமில் எஸ்.என்.எஸ் கல்வி குழுமத்தின் தொழில்நுட்ப இயக்குனர் நளின் விமல்குமார் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார். அடுத்த படங்கள், மாணவர்களுக்கான தொழில்முனைவு சிறப்பு பயிற்சி முகாமின் போது.









### நடைமுறை பிரச்சனைகளுக்கு எளிய தீர்வு!

இந்த நிகழ்ச்சியைப் பற்றி எஸ்.என்.எஸ் கல்வி குழுமத்தின் தொழில்நுட்ப இயக்குனர் நளின் விமல்குமார் கூறுகையில், கோவை மண்ணின் தனிச்சிறப்பாக தினந்தோறும் புதிய தொழில் முனைவோர் திட்டங்கள் மற்றும் இளம் தொழில் முனைவோர்கள் உருவாகி வருகின்றனர். மேலும் கல்லூரியில் பயிலும் மாணவர்களை தொழில்முனைவோராக சிந்திக்க தூண்டும் பொழுது சமூகத்தில் உள்ள பல நடைமுறை பிரச்சனைகளுக்கு எளிதாக தீர்வு காண்கின்றனர். மேலும் தங்கள் தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு மற்றும் சமூகத்திற்கும் ஏற்றவாறு அமைக்க வேண்டும் என்றும் கற்றுக்கொள்கின்றனர்.

மேலும் இந்த பயிற்சி முகாமானது தொழில்முனைவோருக்கு மட்டுமல்லாமல் தங்கள் கல்லூரி படிப்பை முடித்து வேலைக்குச் செல்லும் மாணவர்கள் இதே மனநிலையோடு நிறுவனத்தில் இருக்கும் பல பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கின்றனர். இதன் மூலமாக நிறுவனம் மட்டுமன்றி மாணவர்களும் வளர்ச்சி அடைகின்றனர் என்று கூறி மாணவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

### மாணவர்களின் ஆற்றலை புரிந்துகொள்ள உதவியது!

எஸ்.என்.எஸ் இன்னோவேஷன் ஹப் இயக்குனர் பிரகாஷ் கூறுகையில், கொரோனா காரணமாக இரண்டு ஆண்டுகள் கழித்து மாணவர்களின் ஆற்றலை புரிந்துகொள்ள இந்த பயிற்சி முகாம் மிகவும் உதவியது என்றும் நாங்கள் தூவிய சிறிய விதையை மாணவர்கள் பெரும் விருட்சமாக மாற்றி உள்ளனர் என்று கூறினார்.

மேலும் மாணவர்கள் சமூகத்தின் பல சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வாக பல உன்னத கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளனர். உதாரணமாக இயற்கை பொருட்களால் ஆன சிகரெட், தானியங்கி மருந்தகம், ட்ரோன் மூலமாக மருந்து வினியோகம், என பல கண்டுபிடிப்புகளை உருவாக்கி உள்ளனர் என்றும் மேலும் எங்களுடன் இணைந்துள்ள ஐஐடி பாலக்காடு மற்றும் பல முன்னணி தொழில் நிறுவனங்களின் மூலமாக இந்த கண்டுபிடிப்புகளை நடைமுறை தொழில் திட்டங்கள் ஆக மாற்ற முடிவு செய்துள்ளதாக கூறினார்.


# SNS INSTITUTIONS

www.snsgroups.com

Saravanampatti, Coimbatore

1st Indian Institution to Implement Design Thinking Frame Work

## OUR UG PROGRAMMES

**Arts & Science (Autonomous)**

- B.Sc.Psychology
- B.Sc.Computer Science with Artificial Intelligence and Data Science*
- B.Sc.Computer Science (Graphic and Creative Design)
- B.Sc.Computer Science
- B.Sc.Information Technology
- B.Sc.Computer Technology
- B.Sc.Catering Science and Hotel Management
- B.Sc.Costume Design and Fashion
- B.Sc.Mathematics
- B.Sc.Mathematics (Computer Applications)
- B.Sc.Physics | B.Sc.Chemistry
- B.Com.Digital Marketing and Data Mining
- B.Com. E-Commerce and Data Science*
- B.Com. Corporate Secretaryship with Computer Applications*
- B.Com. | B.Com.Finance
- B.Com.Professional Accounting
- B.Com.Computer Applications
- B.Com.Information Technology
- BCA | BBA
- BBA (Computer Applications)
- B.A.English Literature

COUNSELLING CODE PG:326

*subject to approval

**Engineering & Technology (B.E/B.Tech) (Autonomous)**

- Artificial Intelligence and Data Science
- Artificial Intelligence and Machine Learning
- Computer Science and Engineering
- Computer Science and Design
- Computer Science and Technology
- Computer Science and Engineering (Internet of Things and Cyber Security including Block Chain Technology)
- Computer Science and Engineering* (Cloud and Full Stack Development)
- Computer Science and Engineering* (Data Science and Business Process Automation)
- Computer Science and Engineering* (Gaming / AR / VR / 3-D Printing)
- Information Technology
- Agriculture Engineering | Food Technology
- Bio-Medical Engineering
- Civil Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering
- Aerospace Engineering | Automobile Engineering
- Mechanical and Mechatronics Engineering (Additive Manufacturing)
- Mechatronics Engineering | Mechanical Engineering

SNSCT COUNSELLING CODE 2726

SNSCE COUNSELLING CODE 2734

*subject to approval

**Paramedical Institutions**

- Bachelor of Physiotherapy
- Bachelor of Pharmacy
- D.Pharmacy
- Bachelor of Science in Nursing
- B.Sc.Operation Theatre and Anaesthesia Technology
- B.Sc.Cardio Pulmonary Perfusion Care Technology
- B.Sc.Cardiac Technology
- B.Sc.Physician Assistant
- B.Sc.Radiography and Imaging Technology

PHARMACY COUNSELLING CODE 794 | NURSING COUNSELLING CODE 879 | PHYSIO COUNSELLING CODE 864

Parent Hospital: BRJ Ortho Centre & MAK Hospital (Surgical Super Speciality Hospital)

Tie Up: Coimbatore Medical College (CMC)

MoU with Multi-Speciality Hospitals / Healthcare Centers

## 10 Institutions under SNS

| | | | | |
|---|---|---|---|---|
| SNS COLLEGE OF TECHNOLOGY<br>An Autonomous Institution | SNS COLLEGE OF ENGINEERING<br>An Autonomous Institution | Dr. SNS RAJALAKSHMI COLLEGE OF ARTS AND SCIENCE<br>An Autonomous Institution | Dr. SNS COLLEGE OF EDUCATION<br>Affiliated to TN Teachers Education University | SNS ACADEMY<br>An International CBSE Senior Secondary School |
| SNS COLLEGE OF NURSING<br>Affiliated to The TN Dr.MGR Medical University | SNS COLLEGE OF PHARMACY AND HEALTH SCIENCES<br>Affiliated to The TN Dr.MGR Medical University | SNS COLLEGE OF PHYSIOTHERAPY<br>Affiliated to The TN Dr.MGR Medical University | SNS COLLEGE OF ALLIED HEALTH SCIENCES<br>Affiliated to The TN Dr.MGR Medical University | SNS B-SPINE<br>An Autonomous Experiential Business Programme |

Coimbatore | 90036 55855 | www.snsgroups.com | /snsinstitutions

**சாணக்கியன்**
**தி கோவை மெயில்**







# நடுவுல கொஞ்சம் காங்கிரஸை காணோம்!

**2024 மக்களவைத் தேர்தலுக்காக காங்கிரஸ் எத்தகைய வியூகம் அமைக்கப்போகிறது என்பது மிகப்பெரிய கேள்வியாக எழுந்துள்ளது. ஒரு முனையில் வலுவான பிரதமர் வேட்பாளரான மோடியை காங்கிரஸ் சந்திக்க வேண்டும். அதற்கு வலுவான பிரதமர் வேட்பாளரை காங்கிரஸ் அறிவித்தாக வேண்டும் என்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது.**

நடைபெற்று முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தல் மட்டுமன்றி கடந்த 8 ஆண்டுகளாக நடந்த பேரவைத் தேர்தல்கள், மக்களவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் பின்னடைவையே சந்தித்து வருகிறது.

குறிப்பாக 5 மாநில பேரவைத் தேர்தல்களில் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வாய்ப்பிருந்த பஞ்சாப்பில் விருப்பம் போல அரசியல் செய்ததால், முதல்வரை மாற்றியதால் ஆட்சியை தக்கவைக்கும் வாய்ப்பை காங்கிரஸ் இழந்துவிட்டது. அதேபோல, உத்தரகாண்ட், கோவா மாநிலங்களில் ஆட்சிக்கு எதிராக அதிருப்தி இருந்தாலும் அதை அறுவடை செய்யும் அளவிலான உத்திகளை காங்கிரஸ் செயல்படுத்த தவறியது.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை 1989ல் மண்டல் கமிஷன் அமல்படுத்தப்பட்டது. பின்னர் நடந்த ராமர் கோயில் விவகாரம் ஆகியவற்றில் இருந்தே காங்கிரஸின் வாக்கு வங்கி சரியத் தொடங்கிவிட்டது. குறிப்பாக காங்கிரஸின் வாக்கு வங்கியாக இருந்த பிராமணர்கள், இஸ்லாமியர்கள், தலித்கள் கொஞ்சம் கொஞ்சமாக அக்கட்சியை கைவிடத் தொடங்கி விட்டனர்.

ராமர் கோயில் விவகாரத்தில் பிராமணர்கள் உள்ளிட்ட உயர் ஜாதி வாக்குகள் பாஜகவுக்கு ஆதரவாகவும், ராமர் கோயில் விவகாரத்தில் காங்கிரஸ் இரட்டை வேடம் போட்டுவிட்டதாக அதிருப்தி அடைந்த இஸ்லாமியர்கள், காங்கிரசை கைவிட்டு, ஜனதாதள தலைவர்களை ஆதரிக்கத் தொடங்கிவிட்டனர். இருப்பினும் தேசிய அரசியலில் முதன்மை சக்தியாக காங்கிரஸ் இருந்தது. காரணம், 2014 வரை வாக்கு சதவீதத்தில் பார்க்கும்போது காங்கிரஸ் தான் முதன்மை கட்சியாக இருந்தது.

2014 மக்களவைத் தேர்தலுக்குப்பின் தேசிய அரசியலில் மிகப்பெரிய திருப்புமுனை உருவானது. காரணம், அந்த தேர்தலில் தான் காங்கிரஸ் வாக்கு வங்கி அடிப்படையில் 2 வது கட்சியாக மாறியது. பாஜக ஏற்கெனவே இருந்ததைவிட 12.5 சதவீதம் உயர்ந்தும், காங்கிரஸ் 9.2 சதவீதம் குறைந்தும் போனதால் இந்த திருப்புமுனை மாற்றம் உருவானது.

10 ஆண்டுகள் நிலையான ஆட்சிக் கொடுத்த மன்மோகன் சிங்கை காங்கிரஸ் பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தாததால் காங்கிரஸ் மேலும் வலுகுறைந்தது. எதிர்முனையில் வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றுக்கான தலைவராக மோடி போட்டியிட்டதால் பாஜகவுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்தது.

பாஜக என்பது தலைமை மற்றும் நிர்வாகிகளை அடிப்படையாக கொண்ட கட்சி. காங்கிரஸ் என்பது தலைமையை மட்டுமே நம்பியிருக்கும் கட்சி. இதனால், 2014 க்கு பிறகு காங்கிரஸ் தொடர்ந்து 90 சதவீதம் தேர்தல்களில் பின்னடைவையே சந்தித்து வருகிறது. இந்நிலையில் 2018 இல் நடந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் மட்டும் ஒரு சிறிய வளர்ச்சியை காங்கிரஸ் பெற்றது. ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் மாநிலங்களில் முதல்வர் வேட்பாளர்களை முன்னிறுத்தாமல் காங்கிரஸ் வெற்றிபெற்றது.

இந்நிலையில் 2019 மக்களவைத் தேர்தலிலும் காங்கிரஸ் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தவில்லை. அதுவும் காங்கிரசுக்கு பின்னடைவாகவே இருந்தது. குறிப்பாக தமிழகத்தை தவிர்த்து பார்த்தால் காங்கிரசுக்கு இந்திய அளவில் வாக்கு வங்கியில் பெரிய முன்னேற்றம் இல்லை. அமேதி தொகுதியிலேயே ராகுல் காந்தி தோல்வி அடைந்த பிறகு தனது தலைவர் பதவியை அவர் ராஜினாமா செய்தார். அதன்பிறகு நடந்த ஹரியானா, மகாராஷ்டிரா பேரவைத் தேர்தல்களில் ராகுல் காந்தி ஆர்வம் காட்டவில்லை.

இதன் விளைவு ஹரியானாவில் ஆட்சியைகைப்பற்றும்நிலையில்இருந்தும் அதை நழுவவிட்டது. மகாராஷ்டிரத்தில் கூடுதல் எண்ணிக்கையில் தொகுதிகளை கைப்பற்றியிருக்கலாம். அதன்பிறகு ஜார்கண்டில் சிபுசோரனின் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து அங்கு கூட்டணி ஆட்சியை அமைத்தது. ஆனால், பீகார் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் 70 தொகுதிகளில் போட்டியிட்டு 15 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றது. இது மிகப்பெரிய பின்னடைவாக பார்க்கப்பட்டது.

தனித்தும் வெற்றிபெற முடியாத காங்கிரஸ், கூட்டணி கட்சிகளின் வெற்றியையும் பாதிக்கும் கட்சியாக மாறிவிட்டதோ என்ற தோற்றம் பீகார் பேரவைத் தேர்தலுக்குப்பின் உருவானது. இதனால், தமிழகத்தில் கூட காங்கிரஸ் கட்சிக்கான இடங்கள் குறைக்கப்பட்டன. 2021 இல் நடந்த பேரவைத் தேர்தல்களில் புதுவையில் காங்கிரஸ் ஆட்சியை இழந்ததுடன் கேரளம், அசாமிலும் கூட ஆட்சியை கைப்பற்ற முடியவில்லை.

இப்போதைய 5 மாநில பேரவைத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியையே தழுவியுள்ளது. உத்தரபிரதேசத்தில் 6.4 சதவீதத்தில் இருந்து 2.33 சதவீதமாக காங்கிரஸின் வாக்கு வங்கி சரிந்துள்ளது. அதேபோல, உத்தரகாண்ட் மாநிலத்தில் பாஜக மீதான அதிருப்தியால் 4 சதவீத வாக்கு வங்கியை காங்கிரஸ் உயர்த்தினாலும், ஆட்சியை காங்கிரசால் பிடிக்க முடியவில்லை. அதேபோல, கோவாவில் ஆட்சியை பிடிப்பதற்கான வாய்ப்பு இருந்தும், மாநில பொறுப்பாளர் ப.சிதம்பரம், திரிணாமூல் காங்கிரசை சரிசெய்ய உரிய முயற்சியை செய்யாததால் காங்கிரஸ் இப்போது ஆட்சியை பிடிக்கமுடியாமல் போனது.

அதேபோல, மணிப்பூர் மாநிலத்தில் கடந்த முறை தனிப்பெரும் கட்சியாக இருந்த காங்கிரஸ் இப்போது 3 வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழலில் தேசிய அரசியலில் காங்கிரஸின் முக்கியத்துவம் குறைந்துள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக முழுநேர கட்சித் தலைவர் இன்றி காங்கிரஸ் இயங்கி வருகிறது.

இந்நிலையில் தான், 2024 மக்களவைத் தேர்தலுக்காக காங்கிரஸ் எத்தகைய வியூகம் அமைக்கப்போகிறது என்பது மிகப்பெரிய கேள்வியாக எழுந்துள்ளது. ஒரு முனையில் வலுவான பிரதமர் வேட்பாளரான மோடியை காங்கிரஸ் சந்திக்க வேண்டும். அதற்கு வலுவான பிரதமர் வேட்பாளரை காங்கிரஸ் அறிவித்தாக வேண்டும் என்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதேநேரத்தில் காங்கிரஸ் அறிவிக்கும் பிரதமர் வேட்பாளரை, காங்கிரஸ் கூட்டணி கட்சிகள், பாஜக எதிர்ப்பு கட்சிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாடு முழுவதும் வலுகுறைந்து காணப்படும் காங்கிரஸின் பிரதமர் வேட்பாளரை பிற கட்சிகள் ஏற்குமா என்பது மில்லியன் டாலர் கேள்வியாக எழுந்துள்ளது.

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை இந்திரா காந்தி குடும்பத்தை தவிர வேறு யாரை தலைவராக நியமித்தாலும் தலைமை பிளவுண்டு போகும் நிலையே உள்ளது. ஆனால், அந்த குடும்பத்தில் முன்னிலையில் இருக்கும் ராகுல் காந்தியால் காங்கிரசை வெற்றிப்பாதைக்கு எடுத்துச்செல்ல முடியவில்லை. அதேபோல, காங்கிரஸில் இருக்கும் மூத்த தலைவர்களை கட்டுப்படுத்தவும் முடியவில்லை. அவர்களை கட்சியில் இருந்து நீக்க சோனியா காந்தியை சம்மதிக்க வைக்கவும் முடியவில்லை என்ற விமர்சனம் ராகுல் காந்தி மீது எழுந்துள்ளது.

தேசிய அரசியலை பார்க்கும்போது 2014, 2019 என இரண்டு முறை அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை பிடித்த மோடி தலைமையிலான பாஜக, இப்போதும் மிகவலுவாக உள்ளது. அதேபோல, மீண்டும் மோடியே பிரதமர் வேட்பாளராக களம் காணும்போது அவருக்கு நிகராக அல்லது எதிராக போட்டியிடும் அளவுக்கு ராகுல் காந்தியை முன்னிறுத்த முடியுமா என்பது பாஜகவை எதிர்க்கும் பிற கட்சிகளுக்கு ஐயமாகவே உள்ளது.

இந்நிலையில், பிரியங்கா காந்தியை காங்கிரஸின் தலைமையை ஏற்க வைக்கலாமா என்ற எண்ணமும் காங்கிரஸ் நிர்வாகிகளில் ஒரு பிரிவினரிடம் உள்ளது. உத்தரப் பிரதேசத்தில் எதையும் சாதிக்க முடியாத பிரியங்காவால் தேசிய அரசியலில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதேவேளையில் வலுவான பிரதமர் வேட்பாளரான மோடிக்கு எதிராக பெண் தலைவரான பிரியங்கா காந்தியை முன்நிறுத்தும்போது, பெண் வாக்காளர்களை கவர்ந்து நாடு முழுவதும் காங்கிரசுக்கு புத்துணர்வை ஊட்ட முடியும் என்ற பார்வையும் உள்ளது.

அதேபோல, பிரணாப் முகர்ஜி, மூப்பனார், அகமது பட்டேல் என காங்கிரசுக்கு மிகவும் திறமையான வியூகம் வகுப்பாளர்கள் முன்பு இருந்தனர். ஆனால், இப்போது அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலரான (நிர்வாகம்) கே.சி.வேணுகோபாலால் அந்த அளவுக்கு வெற்றி வியூகத்தை வகுக்க முடியவில்லை. அதேவேளை காங்கிரஸில் இருக்கும் டி.கே.சிவக்குமார், பூபிந்தர்சிங் ஹூடா, பூபேஸ் பாகல் போன்ற நிர்வாகத் திறன் மிக்கத் தலைவர்களால் வெற்றி வியூகத்தை வகுக்க முடியும்.

இதில் பூபிந்தர்சிங் ஹூடா மற்றும் ராகுல் காந்தி இடையே சரியான புரிதல் இல்லாத நிலைதான் உள்ளது. இப்படிப்பட்ட சூழலில் காங்கிரஸ் எப்படி மறுகட்டமைப்பு செய்யப்போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தமிழகம், மகாராஷ்டிரம், ஜார்கண்ட் ஆகியவற்றில் மட்டுமே கூட்டணியில் காங்கிரஸ் உள்ளது. எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் எண்ணிக்கை குறையும் நிலையில் உள்ளது. காங்கிரஸின் வெற்றி விகிதம் குறைவாகவே இருப்பதால் காங்கிரசுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளின் எண்ணிக்கையை குறைப்பதிலேயே கூட்டணி கட்சிகள் குறியாக இருந்து வருகின்றன.

தமிழகம், கேரளத்தில் காங்கிரசுக்கு என தனி ஆதரவு வளையம் உள்ளது. மத்திய பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர், குஜராத், உத்தரகாண்ட், ஹிமாச்சல் என பாஜக மற்றும் காங்கிரஸ் இடையே சுமார் 200 தொகுதிகளில் நேரடி போட்டி நிலவுகிறது.

இவற்றில் 90 சதவீத தொகுதிகளை கடந்த இரு தேர்தல்களில் பாஜக வென்றுள்ளது. காங்கிரஸ் மத்தியில் கூட்டணியுடன் ஆட்சியை பிடிக்க வேண்டுமெனில் இந்த 200 தொகுதிகளில் குறைந்தபட்சம் 60 தொகுதிகளையாவது காங்கிரஸ் வெல்ல வேண்டிய நிர்பந்தம் உள்ளது. அதற்கு வலுவான பிரதமர் வேட்பாளரை காங்கிரஸ் அறிவித்தாக வேண்டும்.

ஒரே நாடு, ஒரே தேர்தல் அடிப்படையில், நாடு முழுவதும் தேர்தல் நடந்தால் அது மோடிக்கே மிகப்பெரிய வாய்ப்பாக மாறும். அதுவும் காங்கிரசுக்கு பின்னடைவை கொடுக்கக்கூடும் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். தென்னிந்தியா மற்றும் கிழக்கு இந்தியாவில் மொத்தம் 200 மக்களவைத் தொகுதிகள் உள்ளன.

இதில் 50 இல் கூட பாஜகவால் வெற்றி பெற முடியாது. எனவே, இத்தொகுதிகளில் காங்கிரசால் அதிக எண்ணிக்கையில் தொகுதிகளை கைப்பற்ற முடியும். அதற்கு கட்சியை கட்டமைப்பு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் மறுகட்டமைப்பு செய்வது அவசியம் என பிரபல அரசியல் வியூக வகுப்பாளரான பிரசாந்த் கிஷோர் கருத்து தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பாஜகவுடன் நேரடியாக மோதும் 200 தொகுதிகள், தென்னிந்தியா, கிழக்கு இந்தியாவில் உள்ள 200 தொகுதிகள் என 400 தொகுதிகளில் குறைந்தபட்சம் 120 தொகுதிகளை காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட்டால் மீண்டும் புத்துயிர் பெற முடியும் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து. அதற்கு காங்கிரஸ் முதலில் செய்ய வேண்டியது வலுவான பிரதமர் வேட்பாளரை இப்போதே அறிவித்து முன்கூட்டியே களத்தில் குதித்தாக வேண்டும். அது பிரியங்கா காந்தியா அல்லது ராகுல் காந்தியா என்பது காங்கிரஸ் தலைமையின் கையில் தான் உள்ளது.

### மாற்றுசக்தி காங்கிரஸ் மட்டுமே!

இது குறித்து அரசியல் விமர்சகர் ரிஷி கூறும்போது, காங்கிரஸ் கட்சி கடந்த எட்டாண்டு காலமாக வெற்றியை சுவைக்க முடியாத சூழ்நிலையே உள்ளது. மேலும் 2019 ஆம் ஆண்டு தேர்தல் தோல்விக்கு பிறகு அந்த கட்சிக்கு ராகுல் காந்தி தலைமை ஏற்க மறுக்கிறார். இதனால் இந்தியா முழுக்க பல காங்கிரஸ் நிர்வாகிகள் தைரியமாக உழைக்கத் தயாராக இல்லை.

இவ்வாறாக தலைமையில் அறிவிக்காமல் பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தாமல் அரசியல் செய்வதில் மேலும் காங்கிரசுக்கு பின்னடைவையே கொடுக்கக் கூடும். ராகுல் காந்தி அல்லது பிரியங்கா காந்தியை பிரதமர் வேட்பாளராக முன்மொழிந்து தைரியமாக களம் ஆடுவதே காங்கிரஸ் பிழைக்க ஒரே வழியாக தெரிகிறது.

அதேவேளை 20 சதவீத வாக்கு வங்கியுடன் இந்தியா முழுக்க பாஜகவுக்கு மாற்று சக்தியாக காங்கிரஸ் மட்டுமே இருக்கிறது என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆகையால் காங்கிரசை தவிர்த்துவிட்டு பாஜகவை தோற்கடிக்க முடியாது என்பது உண்மை.

## கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை

# யாருக்கு, எப்போது செய்ய வேண்டும்?

**தி கோவை மெயில்**

**எந்த நோய் இல்லாவிட்டாலும் 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் துவக்க நிலை மற்றும் முற்றிய நிலையில் உள்ள நோய்களை கண்டறிய முடியும். முழு உடல் பரிசோதனை ஒரே நாளில் மேற்கொண்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது**

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில், உடல்நலனில் அக்கறை செலுத்த பலருக்கும் நேரமிருப்பதில்லை. இதனால், நோயின் அறிகுறிகள் வெளிப்படும் வரை பலரும் கண்டுகொள்வதில்லை. ஆனால், நோய்களை முன்னரே கண்டறிவதன் மூலம் உடல்நலனை பாதுகாத்துக் கொள்ளலாம். அதற்கு முழு உடல் பரிசோதனை பெரிதும் உதவும்.

உண்மையில், முழு உடல் பரிசோதனை என்பது என்ன, அது யாருக்கு அவசியம், அதில் செய்யப்படும் பரிசோதனைகள் மூலம் என்னென்ன நோய்களைக் கண்டறிய முடியும்? என்பது பற்றி கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் முழு உடல் பரிசோதனை மையத்தின் மருத்துவ ஆலோசகர் டாக்டர் ஜோசப் மற்றும் ஸ்மித்தா ஆகியோர் விளக்கம் அளித்துள்ளனர்.

### யாரெல்லாம் முழு உடல்பரிசோதனை செய்ய வேண்டும்?

பல்வேறு நோய் அறிகுறி உள்ளவர்கள், நோய் இருக்கிறதா, இல்லையா என்பதை கண்டறிய விரும்புபவர்கள், புகை பிடிப்பவர்கள், மது குடிப்பவர்கள், சர்க்கரை, இரத்த அழுத்தம் உள்ளவர்கள், எந்த நோய் இல்லாவிட்டாலும் 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் முழு உடல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் துவக்க நிலை மற்றும் முற்றிய நிலையில் உள்ள நோய்களை கண்டறிய முடியும். முழு உடல் பரிசோதனை ஒரே நாளில் மேற்கொண்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

### மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் என்ன?

பொதுவாக ரத்தம், சிறுநீர், மலம், மார்பக எக்ஸ்ரே, காது, மூக்கு, தொண்டை, பல், கண், பரிசோதனைகள், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், ஈசிஜி, டிஎம்டி, எக்கோ கார்டியோகிராம், மேமோகிராம், ஆஞ்சியோகிராம் உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் உள்ளன. நோயாளியின் பழக்கவழக்கங்கள், சந்தேகங்கள், அறிகுறிகளுக்கேற்ப பரிசோதனைகள் விரிவடையும்.

### என்னென்ன நோய்களை கண்டறியலாம்?

ரத்த பரிசோதனையில் ரத்த சோகை, ரத்த புற்றுநோய் பாதிப்பு, நல்ல கொழுப்பு, கெட்ட கொழுப்பு அளவு கண்டறிவதன் மூலம் இதயத்தின் தன்மையை கண்டறியலாம். எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் மற்றும் புரோன்சிட்டிஸ் பரிசோதனை மூலம் நுரையீரல் பாதிப்பு, நுரையீரல் புற்றுநோய் மற்றும் நிமோனியா பாதிப்புகளை கண்டறியலாம். இதன் மூலம் ஏற்பட வாய்ப்புள்ள மாரடைப்பு, பக்கவாதத்தையும் கண்டுபிடிக்கலாம். மேமோகிராம் பரிசோதனை மூலம் மார்பக புற்றுநோய் கண்டறியலாம்.



சர்க்கரை பரிசோதனை மூலம் நீரழிவு நோய், இரத்த அழுத்த அளவு பரிசோதனையில் இரத்த கொதிப்பு, கொழுப்பு அளவு மூலம் நல்ல கொழுப்பு, கெட்ட கொழுப்பு மற்றும் மாரடைப்பிற்கான வாய்ப்புகள் கண்டறியலாம். இசிஜி, டிஎம்டி (ட்ரெட் மில் டெஸ்ட்) மற்றும் ஆஞ்சியோ மூலம் மாரடைப்பு நோய் கண்டுபிடிக்கலாம்.

அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் கல்லீரல் இயக்கம், கொழுப்பு படிந்த கல்லீரல், கல்லீரலில் ஹெபடைடீஸ் பாதிப்பு, கல்லீரலில் சிரோசிஸ் மற்றும் புற்றுநோய் பாதிப்புகளை கண்டறியலாம். மேலும் இத்தகைய பரிசோதனை மூலம் பித்தப்பை கற்கள், குடல் மற்றும் குடலுக்கு வெளியே உள்ள பாகங்கள், கிட்னி, மூத்திரப்பை, அப்பகுதிகளில் பிராஸ்டேட் புற்றுநோய், பெண்களுக்கு கர்ப்பப்பை வாய், கர்ப்பப்பை ஆகியவற்றில் சாதா கட்டி முதல் புற்றுநோய் கட்டிகளை கண்டறியலாம். பரிசோதனையில் கண்டறியப்பட்டால், அந்தந்த நோய்களுக்கேற்ப துறை ரீதியான மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் உரிய சிகிச்சைகள் மேற்கொண்டு குணம் பெறலாம்.

கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் மார்ச் 31 ஆம் தேதி வரை (ஞாயிறு தவிர), 35 வயதுக்கு மேல் உள்ள தம்பதிக்கு 20% சலுகை கட்டணத்தில் முழு உடல் பரிசோதனை செய்யப்படுகிறது.

மேலும் விபரங்களுக்கு: மருத்துவ ஆலோசகர் டாக்டர் ஜோசப் மற்றும் ஸ்மித்தா, முழு உடல் பரிசோதனை மையம், கே.எம்.சி.ஹெச் மருத்துவமனை.

தொலைபேசி: 733 9333 485

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் — ரெஸ்டாரண்ட் - ஸ்வீட்ஸ் - ஈவெண்ட் கேட்ரிங்

THE COVAI MAIL

Sree Annapoorna Sree Gowrishankar — the pride of coimbatore — Restaurant - Sweets - Event Catering

RNI: TNBIL/2014/55455. ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER Postal Reg.No: CB/123/2021-23.

Vol No. : 8 Issue No. : 51 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL Every Sunday, March 20-26, 2022, 8 Pages, Rs.5/- Annual subscription - Rs.260/-

# சட்டமும், நடைமுறையும் மக்களுக்காகவே!

**ஆசிரியர்**
**தி கோவை மெயில்**

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய அரசு நியமித்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை கண்ணில் விரலை விட்டு ஆட்ட ஒரு பதவி இருக்கும் என்றால் அது ஆளுநர் பதவி ஆகத்தான் இருக்க முடியும். மத்திய அரசை குடியரசுத் தலைவர் கலைக்க முடியும். மாநில அரசை மத்திய அரசு நினைத்தால் கலைக்க முடியும். ஆனால் ஆளுநர் பொறுப்பு அப்படி அல்ல, அவரை நியமித்து மத்திய அரசு மனது வைத்தால் மட்டுமே ஏதாவது செய்ய முடியும்.

1960 களிலேயே இந்த ஆளுநர் பதவி குறித்து கேள்விகள் எழத் தொடங்கி விட்டன. குறிப்பாக திமுக, ஆட்டுக்கு தாடி எதற்கு, நாட்டு கவர்னர் எதற்கு என்று கேள்வி கேட்டது. 50 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்த கேள்வி அவ்வப்போது பொதுவெளியில் எழுந்து கொண்டுதான் இருக்கிறது. தற்போதும் அது எதிரொலிக்க தொடங்கி இருக்கிறது. எப்போதெல்லாம் மத்திய மாநில அரசுகளில் எதிர்க் கருத்துக்கள் கொண்ட இரு கட்சிகள் ஆட்சியில் அமர்கிறதோ, அப்பொழுதெல்லாம் இது தொடர்கிறது.

சமீபத்தில் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்த திமுக அரசு, பாரதிய ஜனதா கட்சிக்கு எதிரான கொள்கை கொண்டது. இதற்கு முந்தைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் இருந்தபொழுது இருந்த அதிமுக, பாஜகவின் தோழமைக் கட்சி. அதனால் பெரிய அளவில் சிக்கல் எழவில்லை. ஆனால் தற்போது வந்துள்ள ஆளுநர் ரவி வந்த பிறகு இந்த மோதல் பொதுவெளியில் நடக்கத் தொடங்கியுள்ளது.

முதலில் நீட் தேர்வு குறித்த சிக்கல். இதில் மத்திய அரசும், மாநில அரசும் இருவேறு கொள்கைகள் கொண்டுள்ளனர். நீட் தேர்வை ரத்து செய்வதை வாக்குறுதி கொடுத்து தான் திமுக ஆட்சிக்கு வந்தது. அந்த வகையில் நீட் தேர்வை நீக்க வேண்டி கேட்கிறது. இதன் சாதக பாதகங்கள் வேறு விஷயம். நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி ஒரு மசோதா தமிழக அரசால் ஆளுநருக்கு அனுப்பப்படுகிறது. அதனை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டிய ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி 142 நாட்கள் அனுப்பாமல் வைத்திருக்கிறார். பிறகு மசோதாவை தமிழக அரசுக்கு திருப்பி அனுப்புகிறார்.

தமிழக அரசு சட்டசபையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றி, மீண்டும் அதை ஆளுநருக்கு அனுப்புகிறது. இந்த முறை ஒரு மாதத்துக்கும் மேல் ஆகிறது. ஒருபுறம் தமிழக முதல்வர் ஆளுநரை சந்தித்து மசோதாவை அனுப்புமாறு வேண்டுகோள் வைக்கிறார். இன்னொருபுறம் திமுகவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு ஆளுநரை மாற்றுங்கள் என்று மத்திய அரசுக்கு காரசாரமாகப் பேசி கோரிக்கை வைக்கிறார்.

இதைப் போலவேதான் கல்விக்கொள்கையும். நாடு தழுவிய ஒரு கல்விக் கொள்கையை மத்திய அரசு கொண்டுவர திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. ஒப்பீட்டளவில் கல்வித்துறையில் முன்னேறியதாக கருதப்படும் தமிழக அரசு இதனை பல முனைகளிலும் எதிர்க்கிறது. ஒரே விழாவில் ஆளுநரும், முதல்வரும் இருவேறு கருத்துக்களை தங்கள் தரப்பு வாதங்களை எடுத்து வைக்கிறார்கள். இந்தியா 1947 க்கு பிறகு உருவானது அல்ல என்று ஆளுநரும், பன்மைத்துவம் நமது அடிப்படை, ஒரே நாடு ஒரே கொள்கை என்பது பொருந்தாது என்று தமிழக முதலமைச்சரும் கூறுகிறார்கள்.

விடுதலை பெற்ற இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு ஒரு பொறுப்பும் கடமையும் உள்ளது. அடிப்படையில் கூட்டாட்சி தத்துவத்தில் இயங்க வேண்டிய மத்திய அரசு, ஆளுநர் பதவி மூலம் மாநில அரசுகளுக்கு செக் வைத்து சிக்கலை உண்டாக்குவது தொடர்ந்து வருகிறது. குறிப்பாக வேறு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் மாநில அரசுக்கு எதிராக அவ்வப்போது சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவிப்பதும், கண்ணுக்கு

**விடுதலை பெற்ற இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு ஒரு பொறுப்பும் கடமையும் உள்ளது. அடிப்படையில் கூட்டாட்சி தத்துவத்தில் இயங்க வேண்டிய மத்திய அரசு, ஆளுநர் பதவி மூலம் மாநில அரசுகளுக்கு செக் வைத்து சிக்கலை உண்டாக்குவது தொடர்ந்து வருகிறது.**

தெரியாத முட்டுக்கட்டை போடுவதும் தொடர்கிறது.

மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சி அங்குள்ள ஆளுநரால் பல சிரமங்களை எதிர் கொள்கிறது. கேரளாவில் இடதுசாரி அரசும் கடுமையாக எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகத்திலும் அவ்வப்போது உரசல் எழுகிறது. இதுவே பாரதிய ஜனதா கட்சி ஆளும் கர்நாடக மாநிலத்தில் இந்த நிலை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

என்னதான் அரசியல் சட்டப்படி ஆளுநர் செயல்பட்டாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசை கண்காணிக்கும் பணியைத்தான் செய்கிறார். தேவைப்படும் இடங்களில் முட்டுக்கட்டை போடும் பணியையும் செய்து வருகிறார். இது முழுக்க முழுக்க மத்திய அரசின் கைகளில் அதிகாரம் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. மாநில அரசுகள் எப்போதும் நியமிக்கப்பட்ட அரசுகள் அல்ல, அவை மத்திய அரசைப் போலவே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவை. இதனை புரிந்து கொண்டு ஆளுநர் செயல்பட வேண்டும்.

சட்டத்தில் இடமுண்டு என்பதற்காக தாமதப்படுத்துவதைத் தவிர ஒரு மசோதாவை ஒரு ஆளுநர் வேறு ஒன்றும் செய்ய முடியாது. குடியரசுத் தலைவருக்குத்தான் மசோதாவை நிராகரிக்க ஒப்புக்கொள்ள, அல்லது விளக்கம் கேட்க, வல்லுநர் குழு அமைக்க அதிகாரம் உண்டு. அது அவரின் அதிகாரம். இடையில் ஆளுநர் ஏன் தாமதம் என்ற பெயரில் மக்களை குழப்பத்தில் ஆழ்த்த வேண்டும்.



நம் நாட்டில் மக்களுக்காகத்தான் சட்டமும் நடைமுறையும் அரசாங்கமும். இதில் மக்கள் பாதிக்கப்படும் போது இது குறித்து சிந்திப்பதும், விவாதிப்பதும் மிகவும் அவசியமானது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய அரசையும், மாநில அரசையும் அவர்களின் நடைமுறை தவறு என்று கருதினால் தண்டிப்பதற்கு அடுத்த தேர்தல் உண்டு. பதவியில் இருக்கும்போதே டிஸ்மிஸ் செய்வதற்கும் சட்டத்தில் இடமுண்டு. ஆனால் நியமிக்கப்படும் பதவியான ஆளுநரை கேள்வி கேட்க, நியாயம் கேட்க எவ்விதமான தளமும் இல்லை என்பதே நடைமுறை உண்மை.

மத்திய அரசு ,மாநில அரசு ஆளுநர் அனைவருமே ஜனநாயக நாட்டில் மக்கள் பணி செய்ய உருவாக்கப்பட்ட அமைப்பு களாகும். மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயல்படுவதுதான் நியாயம், வரவேற்கத்தக்கது. ஏனென்றால் ஜனநாயகத்தில் மக்கள்தான் என்றென்றும் எஜமானர்கள்!



# Transform the Present for a better Future

David Karunakaran
The Covai Mail

The needle that indicates a nation's Health & Environment's status should be on the optimum side, in order for that country to progress superbly in the present and future.

According to World Health Organization's Global Spending on Health report 2019, it has been stated that between 2000 and 2017, overall health spending dramatically increased in a group of 42 countries that experienced fast economic growth.

"On average, real health spending per capita grew by 2.2 times and increased by 0.6 percentage points as a share of GDP. For most, the growth of health spending was faster than that of GDP."

However, there is inequality in countries that have same growth; "richer countries spend more on health, but there are large variations among countries of similar incomes", the report says.

To reduce discrepancies among different regions and to enhance social equity, improvement & innovation in the health infra becomes a must. Following this pandemic, we as global citizens also need innovative solutions to not just face the present but the future. While it is no doubt we have advanced solutions today, there are still areas where we can and must improve; be it equity, efficiency, management and vision.

G.Kuppuswamy Naidu Memorial Hospital's CEO Dr.Ragupathy Veluswamy's views about the Future of Healthcare, and the places hospitals need to focus have been featured in the prestigious Physician Leadership Journal, published in March/ April 2022 issue of the American Association of Physicians Leadership in USA.

The journal's peer-team have hand-picked only 8 CEOs of leading hospitals across the globe to get their thoughts about Healthcare's future scenario in the world, and The Covai Mail had the opportunity to meet Dr. Veluswamy and gather his views.

***We are going to see unprecedented growth in activity directed at outcome measurement in the western world and we will be entering the scene soon.***

**"Patients will decide the pace of change in healthcare"**

"Healthcare systems, physicians and all healthcare providers have to be ready to face any crisis as and when it happens. A perfect example is COVID-19 pandemic. When the pandemic hit us, we didn't know anything about the disease how to diagnose, manage or treat; we learnt the treatment process as the pandemic progressed."

"Future healthcare will be consumer-driven; their demand will accelerate the pace of change in healthcare. Healthcare systems across the globe are already transitioning to health IT systems powered by cloud and data and analytics tools to enable real time smart digital health. Digitalization of healthcare is a priority now more than ever before. Digital health includes mobile health, health information technology, wearable devices, telehealth and telemedicine. Soon Patients and their physicians can access health information as in when needed irrespective of geographical location- that will become the norm of healthcare across the globe."

"Every individual's health journey is different. Health systems should recognize this fact while applying virtual care, AI and other technologies to personalize medicine. We have to constantly remind ourselves that technology is an enabler and can never replace the skills and experience of the clinician."

"Future lies in developing a system where all physicians hospitals and patients truly partner for better outcomes; all stakeholders communicate with each other taking timely action with prioritization of tests, removing redundant processes can add value delivering best care to patients."


"We must move from a focus on acute care to the promotion of health. We must deploy a holistic approach that brings together acute care and chronic care, clinical and nonclinical care, prevention and overall physical and psychological wellness."

"We in India need to think and focus on integrative medicine-therapeutic relationship between the physician and patient-where appropriate use of conventional and alternative methods of treatment will have to be practiced whenever possible."

"When people seek healthcare, they want to know if the treatment will help them get better and lead a normal or near normal life. In other words, they want to know the outcome. It is the result of healthcare provided in terms of health over time. We are going to see unprecedented growth in activity directed at outcome measurement in the western world and we will be entering the scene soon. Outcomes measure the effectiveness of various medical interventions and processes. They are assessed in terms of mortality, morbidity, infection, readmissions, functional status, patient satisfaction and cost."

"Healthcare is complex and is a fertile ground for more innovations. In future more and more treatment modalities will be guided by genetic analysis for certain specific complex cases. Healthcare professionals will face increasing demands from patients. Healthcare organizations will be called upon to demonstrate reliability, transparency and most importantly a sense of caring and empathy.

No one individual can cope up with the advances in technology, science and medical innovative research. Yes it is mind boggling. Only by working as coordinated teams we will be able to deliver quality care to patients. It is possible just by focusing on what we as healthcare professional do every day. I believe "Being passionate of daily work can help achieve the impossible"




**Dr.Ragupathy Veluswamy,** *CEO, GKNMH*

*Photo: Sathis Babu*

## Milaap users safeguarded through policy

The Covai Mail

Milaap.org, India's leading crowdfunding platform introduces Milaap Guarantee, to add an enhanced layer of protection to online giving. The initiative, a first of its kind in India, guarantees a complete refund to donors in the rare instance of a fraud committed by a fundraiser and ensures donations reach the right beneficiaries every time.

Anoj Viswanathan, President & Founder of Milaap.org, said, "The scale of good done by our community of donors through Milaap is massive compared to a handful number of cases where fraud occurs. This has been made possible because of our relentless focus on continuous background verifications of fundraisers to build a trusted giving platform. With Milaap Guarantee, we want every donor to be assured that every rupee they contribute will go towards the right person and the right purpose."

## Josh app brings 'South Super Party'

The Covai Mail

One of India's fastest-growing and most engaged short-video app, Josh kickstarts a first of its kind IP, the 'South Super Party' for the entire South Indian audience.

In collaboration with Red FM 93.5, the South Super Party aims at engaging the four main South Indian language communities from the Tamil, Malayalam, Kannada and Telugu speaking audiences.

The four communities will compete to showcase the authenticity of their language and culture. Calling upon participation from each language community, contestants will have to create videos that highlights their state's beauty, pride, and uniqueness, among others. The state with the best content will be declared as the winner and will receive the opportunity to host South India's biggest party, the South Super Party on 2nd April 2022.

## Karunya IT creates awareness about Cyber Threats

The Covai Mail

As the world adapts to the latest digital changes, it has become absolutely necessary for everyone to know more about cyber-security.

To create awareness about cyber threats and issues among school children, the faculties and group of students from various departments of Karunya Institute of Technology and Sciences, conducted cyber-crime awareness and career guidance program in various schools of different districts like Tenkasi, Tuticorin etc. recently. The students were briefed about credit card frauds, phishing, spoofing, identity theft, cyber stalking, scamming, Denial of service, malware, virus attacks etc. A press release mentioned that the Team from Karunya gave a clear understanding about the usage of tools like encase, FTK imager and many software tools to rectify, retrieve and prevent crimes.

*International Civil Engineering Conference*

## Learn from Traditional Structures

***- V. Saraswathy,** Chief Scientist at CSIR - CERCI, Karaikudi*



*From Left: Prof.Sakthi Prasanth, Prof.Abdul Aleem, P.V.Mohanram, Secretary, PSG iTech, Saraswathy, Prof. Chandramohan,Principal, PSG iTech, Prof.Rajkumar and Prof.Naveen Ganesh.*

The Covai Mail

Civil Engineers should try to learn from the traditional structures (edifices) which are very good examples of sustainable structures, expressed V. Saraswathy, Chief Scientist at CSIR - CERCI, Karaikudi.

She said this while delivering the inaugural address at the Fourth International Conference on Sustainable Practices and Advancements in Civil Engineering (SPACE'22) recently, organized by the Department of Civil Engineering of PSG iTech in association with Deakin University, Australia, the Indian Society for Technical Education (ISTE), and the American Concrete Institute.

Prof. Rajkumar elaborated the conference theme and shared the unique features about the conference. Ms.Saraswathy, in her address, emphasized on the importance of sustainability aspects and advanced materials used in the construction of infrastructure in recent days.

This two-day international conference featured six keynote speakers from different parts of the world and eleven technical sessions on various interesting topics. Around 84 research papers were presented after a careful scrutiny of 124 papers received from various Colleges and Universities across the world. Ms.Saraswathy also released the proceedings of the conference.

## School kids express talents at Creafest




*Seated from Left: Uma, Sundar, Pazhaniswamy and Gopalakrishnan with the winners of various contests.*

The Covai Mail

Around 800 students from 70 schools across Tamil Nadu participated in Creafest organized by Sri Ramakrishna Polytechnic College (SRPTC) recently.

The College holds this event every year to give a platform for school students to showcase their interest and talents. This year it was held in virtual mode.

Pazhaniswamy, District Science Officer, Regional Science Centre, Coimbatore took part as the Chief Guest and gave away the cash prize to the winners of the events at the Prize Distribution Ceremony held on Tuesday. Sundar, Joint Managing Trustee, SNR Sons Charitable Trust presided over the prize distribution ceremony. College's Principal Uma, Vice Principal, Gopalakrishnan, and Coordinator of the Creafest Sudharkani were present during the occasion.

## HICAS hosts Training for Social Work Educators

The Covai Mail

PG & Research Department of Social Work, Hindusthan College of Arts And Science, organized a Three Day Regional Level Training Program on Social Defence Issues for Social Work Educators in collaboration with National Institute of Social Defence, Ministry of Social Justice and Empowerment, Government of India recently.

The Resource Person, Nirmala, Principal, PSGR Krishnammal College for Women stated that there are three important components for outreach activity.

"The first is teaching and learning on the academic part which is the primary function carried out by the institutions. The second is research activity to build new knowledge and the third is the outreach or community activity through which we give back to the community which is our major social responsibility as well."

"By organizing such training programs, we train not alone our students but also reach out to the society and build the skills of youth."

"She further said, the knowledge that the participants gain through these programs should be carried to the society."

"And if there is any conflict with law, we need to find out what is the root cause of such problems and solve accordingly."

## Zheena, JewelOne's Exclusive Gemstone Jewellery Collection



*From left : Customers Premalatha, Gayathri, JewelOne's MD K.Srinivasan, COO N. Vaideeswaran with the collection*

The Covai Mail

JewelOne, one of South India's fastest growing retail jewellery brands from the house of Emerald Jewel Industry India Limited is back with a new collection, not long after they launched their diamond jewellery collection called Nirjhara. The new collection is called Zheena, which is gemstone jewellery that celebrates the qualities of vibrance and rarity.

Zheena gemstone jewellery collection was unveiled in the presence of the JewelOne's Managing Director K. Srinivasan, Chief Operating Officer N. Vaideeswaran and other guests from the company at JewelOne's Madurai showroom recently. T The collection is now all set for customers to purchase. The event was attended by JewelOne customers and other dignitaries.

Zheena is inspired by the vibrance of gemstones and is a complement to woman who reflects such vibrance, with her enthusiasm and lively presence, no matter where she is present. The jewellery is brought to life at state-of-the-art manufacturing facilities of Emerald Jewel Industry India Limited, one of Asia's largest manufacturers of precious jewellery based out of the vibrant city of Coimbatore.

K. Srinivasan, Managing spoke to the media and said, "As we present to you our latest collection…. Zheena… that's like a poetry to the vibrance of a woman… I'd like to add that we've enjoyed success with our collections like Ayanaa and Nirjhara in the past, and now we want to delight our customers with more such collections. There's more coming ahead. This collection is a mix of 20-30% Traditional design patterns and 70-80% contemporary patterns. The collection comprises of Long Harams, Neckwear, Choker, Bangles, Earrings and Finger Rings. The price range starts from Rs. 20,000/- to Rs. 5 lakhs."

## Vi brings Gaming for its customers

The Covai Mail

Vodafone Idea Limited launched a new proposition for gaming enthusiasts in India - Vi Games recently.

It is available on the Vi App in partnership with Nazara Technologies Limited, an India-based diversified gaming and sports media company.

Through this deep-integrated association, Vi customers will get access to a wide range of gaming content including popular game titles from various franchises in India on its gaming platform - Vi Games.

Vi Games has gaming content into 3 categories - Platinum Games, Gold Games and Free Games, on the Vi App. Vi says that this portfolio offers an immersive gaming experience with 1200+ android and HTML5 based mobile games across 10 popular genres like - Action, Adventure, Arcade, Casual, Education, Fun, Puzzle, Racing, Sports and Strategy.

## Session on Opportunities in Defence Sector

The Covai Mail

Training and placement division of VLB Janakiammal College of Arts and Science organized a Pre-Placement Training in Employment Opportunities in Defence Sector recently.

Director of Nethaji Bose Defence Academy, Anto stated the importance of defence sector and responsibilities. He spoke about the selection process and where the students can apply for posts like Engineers, Naval Officers, Account Officers, Logistics, Aviation, Submaine, General Analysist, IT Technician and so on in the three wings. He also demonstrated how the election process will be at the Defence wings.

## A platform to exhibit marketing skills

The Covai Mail

Marketing is a diverse field, where one has to effectively communicate the usefulness of a product to a wider audience.

The BBA Department at Sankara College of Science and Commerce organizes an Exclusive Marketing Mela for students called Mavericks Mela.

In this event nearly 15 + stalls featuring products belonging to various sectors like Mobile,Jewellery, Food, Art and Games were installed. The students who ran their respective stalls made use of this platform to put their marketing skills to good use.

Many students from various classes visited the stalls and purchased the items. Radhika, Principal and Bernard Edward, Vice Principal distributed the prizes to those who made excellent marketing at the event.

*To Advertise in*
**THE COVAI MAIL**
**84898 12341**
**84895 12341**
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL
**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.

RNI Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from #2-F, Trishank Apartment, G.K.D Nagar, Nethaji Road, Papanaikenpalayam, Coimbatore - 641 037 and Printed at Newsmen Associates Limited, #1, Sidco Industrial Estate, Kurichi, Coimbatore - 641 021. Editor: C.Srinivasan

# PSG announces collaboration with Johnson & Johnson Institute



*Dr.T.M. Subba Rao (right) and Dr.Vinod Gopal (left) with the MoU. Also seen are Dr.P.R. Rajkumar (3rd Right), Dr. J.S. Bhuvaneswaran (2nd right) and representatives of both entities.*

The Covai Mail

To provide advanced training in surgical skills to Post-Graduate students of PSG IMSR, PSG Hospitals signed a Memorandum of Understanding with Johnson & Johnson Institute (JJI), recently.

While PSG IMSR, the medical college run by PSG & Sons' Charities has facilities to train students on various basic surgical skills, through this collaboration, the post graduate students at PSG Institute of Medical Sciences and Research (PSGIMS&R) can train in advanced surgical concepts.

Dr.T.M. Subba Rao, Principal, PSG IMSR and Dr.Vinod Gopal, Director for Professional Education, Johnson& Johnson Private Limited signed the MoU. Dr P.R. Rajkumar, Medical Director, PSG Hospitals, Dr J.S. Bhuvaneswaran, Director, PSG Super Specialty Hospital, and representatives of both entities took part at the inking of MoU. A press release from PSG mentioned that the Medical Director of PSG Hospitals had requested Johnson & Johnson Institute to offer their customized skill modules to the surgeons of Super Specialty department such as Cardiothoracic Surgery, Neurosurgery, Urology, Surgical Oncology, Plastic Surgery, Paediatric Surgery, Liver Transplant Surgery etc.,. Many of these consultants use very fine sutures which can be used only under an operating microscope. In response, Dr Poovizhi, Manager of Professional Education, Johnson & Johnson Institute, responded that Johnson& Johnson Institute has constructed two mobile training centers called 'Institute on Wheels' which offer skill training on these disciplines. This mobile center reaches affiliated centers on specified dates in a year and the Postgraduates and faculty can make use of this program. Dr.Vinod Gopal mentioned that, the entire training program is offered free of cost, as part of Corporate Social Responsibility.

## *Minister launches*
# New branch of Max Hair



*Minister Senthil Balaji, Manimekalai Mohan, N.Karthik (Ex MLA) and members of Max Hair Clinic during the launch.*

The Covai Mail

Leading hair regrowth Solution Company in India, Max Hair Clinic launched its new branch in Coimbatore on Thursday.

It was inaugurated by V. Senthil Balaji , Minister For Electricity , Prohibition And Excise , Govt. Of Tamil Nadu, in the presence of Manimekalai Mohan, Founder, SSVM Institutions, Saran Vel Jayaraman, the brand's owner and other staff members of the Clinic.

The Clinic is a leading American registered hair regrowth brand, placing a strong impetus on high quality service, technological innovation and affordable wellness hair regrowth by treatments, according to a press release.

This is the sixth branch to be launched in Coimbatore by Max Hair. The press release further said that the clinic offers complete US-FDA approved and Advanced solution for hair loss and regrowth with both clinical as well as non - clinical treatment options.

## 25+ TVS iQube EVs delivered on a single day!

The Covai Mail

Sri Sakthi Saradha TVS, located Avinashi Road delivered more than 25+TVS iQube electric scooters on Thursday. This is the highest number of electric vehicles to be delivered on a single day.

TVS Motors Territory Manager, Rahul presented the vehicles to the customers in the presence of Dhanasekaran, MD, Hari, GM and members of Sri Sakthi Saradha TVS.

# Amway's measure to address nutrition inequality in Children

The Covai Mail

According to the World Health Organization (WHO), roughly 5.2 million children under age 5 die each year from preventable causes, and malnutrition is the underlying cause of 45 percent of these deaths globally (WHO) and 68% in India (Lancet).

Deprivation of adequate nutrition during the first 1,000 days of a child's life often leads to stunted growth, poor cognitive development, and low immunity to disease. To address nutrition inequities in children, Amway launched the Power of 5 campaign in India in 2018 and has benefitted over 25,000 children under-five and over 90,000 mothers and caregivers.

Aligned with the Government of India's National Nutrition Mission, the program offers holistic solutions to create awareness and implement educational interventions at the grassroots level. Currently, the second phase of the project is operational with the SRF Foundation, covering 40 villages in Nuh district, Haryana, benefiting 26000 children. The nutrition program - Power of 5 has so far benefitted over 130000 people, including 36000 children in India.

Further, extending its expertise in nutrition to support the numerous burdens of malnutrition, Amway announced the launch of an innovative micronutrient supplement - Nutrilite Little Bits. The company states that this supplement provides daily essential vitamins and minerals to help manage micronutrient deficiency such as anemia.

# Reduction of fiscal deficit is a welcome measure - SIEMA

The Covai Mail



The Southern India Engineering Manufacturers' Association (SIEMA) shared via a press release that it welcomes the Tamil Nadu budget announcements. The reduction of fiscal deficit from 4.6% to 3.8% is a welcome measure.

"The announcement of an Industrial Park for Coimbatore is fulfilment of long-standing demand of Coimbatore Industry. Allocation of Rs 2500 crores for a special scheme on Industry 4.0 is a great forethought. Allocation of about Rs 2,500 crores for upgrading ITI's shall improve the skill set Tamil Nadu Youngsters. Rs 300 crores allocation for MSME technology upgradation and 100 crores for credit guarantee shall all the foster industrial growth of Tami Nadu," said K.V.Karthik, President, SIEMA.

"The announcement of additional one lakh free agricultural connections for farmers increases the scope for Pump Industry. The industry suffering from low demand for the past one year sees scope of revival through this announcement. The increased allocation for AMRUT 2.0 and Jal Jeevan Mission have potential for increasing the demand for pumpsets."

"The announcement of two industrial clusters for electronics will not only foster the development of the electronics industry but also pave way for overall growth of engineering industries."

## *5th Alumni Congress of PSG Tech*
# Use Technology to Make a Difference in the World

**- C.Devarajan,** *MD, URC Construction, Erode.*



*The Young Alumni Awardees with (From Left) Kaarthick, Secretary, Alumni Congress, Prof. Giriraj, D.Nandakumar, C.Devarajan, Prof.K.Prakasan, KPM Muthukumaran and Prof.Arasu.*

The Covai Mail

Few days ago India provided Rs.7500 crore aid to Sri Lanka, and most of them is for food related help.

This doesn't mean that we have plenty food here, there are more than 25 crore Indians who don't get 3 meals a day. Among that some get only 1 meal a day. For this to change, we need to provide solutions.

"We should think how we can utilise our knowledge and technology to make a difference in this world," said C.Devarajan, MD, URC Construction, Erode.

He said this at the 5th Alumni Congress of PSG Tech Alumni Association. He was the Chief Guest of the event.

PSG Tech has one of the largest Alumni Associations in India with more than 15 chapters across the globe.

The association hosts Alumni Congress which takes place once in 2 years; where accomplished alumni of the College (PSG Tech and PSG Polytechnic College) belonging to various disciplines meet and discuss about their fields, the disruptions and paradigm shifts in industry and also open doors for networking with the present students.

D.Nandakumar, President of the association shared about the enormous financial support PSG Tech Alumni Association provides to underprivileged students, every year.

KPM Muthukumaran, Chairman of the Alumni Congress shared that this event which started in 2012 serves as a very good knowledge sharing platform, wherein 70 speakers will address students this year on a range of topics. K.Prakasan, Principal, PSG Tech delivered the Presidential Address.

B Giriraj, Principal, PSG Polytechnic College introduced the Young Alumni Awardees of this year. Following the award presentation, AV Varadharajan, Past President of PSG Tech Alumni Association shared about the status of PSG GRD Museum and how Alumni have contributed support to it and how they can continue. Prof.Arasu rendered his note of gratitude.

### Go and Perform - *C.Devarajan*

The Chief Guest said students and alumni of PSG Tech, an institution which is soon going to celebrate its 75th year should think about the status they want their nation to be when they celebrate their Jubilee.

He said post this pandemic and the Russia-Ukraine War, there could be a food crisis in the coming days., according to a report. He wished that people with knowledge and technology as resources should brainstorm and come out with solutions to address issues like this.

Talking about business, he shared that a Confident and Ethical approach in any field will reward people in time.

He underlined that such a value-based system has been the main factor in URC's growth today as one among the top 10 construction companies in India.



He wished the young aspirants to never hesitate or doubt their own potential."Don't believe that doing things ethically can hold you back," he opined.

He said all was not Cake walk in his 35+ years in business life, and many challenges came to URC over the years. He credited the company's value system laid by founders for guiding them in the right way during turbulent times.

"In 2031, our company would be celebrating 75 years. By that time we would like to become a $ 2 billion company". He said that to realise this dream URC is already working on all work orders be it small or big with zeal and will.


He urged the young aspiring entrepreneurs to "Go and perform", even if that opportunity is small, think how to improve it and dare to be different.

"When you prove you are unique, there will be recognition, people are there to appreciate such works," he emphasized.

He said PSG and all Stakeholders of Covai have a very large opportunity and responsibility in the days and years to come because Tamil Nadu is looking for a larger development.

Chennai is already overburdened. So when Covai improves its business ecosystem, investment attractive capabilities, business partnerships; it can establish a large facility that can become the business nodal center for the entire Kongu Region.

He wished Coimbatore to have large business districts in future so that, it can provide technology solutions to all businesses.

# உலகியல் வாழ்க்கையை துறக்காமலே ஆன்மீகம் சாத்தியமா?



தி கோவை மெயில்

உலகியலில் என்ன செய்ய விரும்புகிறீர்கள், எந்த அளவுக்கு அதனை செய்வது என்பதெல்லாம் ஒவ்வொரு தனிமனிதரும் தன் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்வு செய்துகொள்ள வேண்டியதுதான். அது ஒவ்வொரு தனிமனிதருக்கும் உள்ள உரிமையும் கூட.

**சத்குரு:** மனித சக்தி என்பது, தனக்குள் இருக்கும் பேராற்றல். அதனை உணர்வதன் மூலம் ஒரு மனிதனால் தன்னையே உணர இயலும். தன்னை உணர வேண்டுமானால் உலகியல் வாழ்க்கையில் இருந்து விடுபட்டாக வேண்டுமா என்று பலரும் கேட்கிறார்கள். உலகியல் வாழ்க்கை, லௌகீக வாழ்க்கை என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

உங்கள் உணவை நீங்களே சமைக்கிறீர்கள். உங்கள் ஆடைகளை நீங்களே தூய்மை செய்கிறீர்கள். இவையெல்லாம் உலகியலின் அங்கங்கள்தான். இவற்றையெல்லாம் செய்யாமல் இங்கே வாழ இயலாது.

ஒவ்வொரு மனிதரும் உலகியலில், தான் எந்தவிதத்தில் ஈடுபட வேண்டுமென்பதை சுய விருப்பத்தின் பேரில் தானாகவே தீர்மானிக்கிறார். சிலர் அரசியலில் இருக்கிறார்கள். சிலர் அலுவலகங்களில் பணிபுரிகிறார்கள். சிலர் தொழிலகங்களை நடத்துகிறார்கள். சிலர் தரை பெருக்குகிறார்கள். இவர்கள் எல்லோருமே உலகியலில் இருப்பவர்கள்தான். எனவே உலகியலில் இருந்து விடுபடுவது அவ்வளவு எளிதான விஷயமல்ல.

உலகியலில் என்ன செய்ய விரும்புகிறீர்கள், எந்த அளவுக்கு அதனை செய்வது என்பதெல்லாம் ஒவ்வொரு தனிமனிதரும் தன் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்வு செய்துகொள்ள வேண்டியதுதான். அது ஒவ்வொரு தனிமனிதருக்கும் உள்ள உரிமையும் கூட.

இதில் சிலர் தானாகவே எதையும் செய்வதில்லை. பிறர் செய்வதையெல்லாம் பார்த்து அதுபோல் செய்ய முற்படுகிறார்கள். தான் என்ன செய்ய வேண்டும் என்கிற தெளிவோ, விழிப்புணர்வோ அவர்களிடம் இல்லை.

இத்தகைய ஒரு சிலர்தான், ஆன்மீக வழியில் செல்பவர்களைப் பார்த்து "இவர்கள் பொறுப்புகளை உதறிவிட்டுப் போகிறார்கள், உலகிற்காக வாழாமல் தனக்காக வாழ்கிறார்கள்" என்று புகார் சொல்கிறார்கள்.

வீட்டிலும் அலுவலகத்திலும் மட்டுமே இயங்குபவர்கள் தனக்காக வாழ்பவர்கள். அவர்களுக்குத்தான் உலக நலனில் அக்கறை இல்லை. தனது சொந்த நலனுக்காக என்று வந்துவிட்டு அந்த வலையிலிருந்து விடுபட இயலாமல் தவிப்பவர்கள்தான் ஆன்மீகப் பாதையில் செல்பவர்களைப் பார்த்து, "வாழத் தெரியாதவர்கள், உலகத்தை விட்டு ஒதுங்கிவிட்டார்கள்" என்று சொல்லத் தொடங்குகிறார்கள்.

ஒரு குடிகாரன் இருந்தான். முழுபோதையில் தள்ளாடியபடியே ஒரு பேருந்துக்குள் ஏறியவன், எல்லோருடைய கால்களையும் மிதித்து பெட்டிகளைக் கலைத்து, தட்டுத் தடுமாறி, ஒரு கிழவியின் மீது விழுந்தான். கோபம் கொண்ட அந்தக் கிழவி, "நீ நரகத்திற்குப் போவாய்" என்று சபித்தாள்.

உடனே அந்தக் குடிகாரன், "அப்படியானால் நான் தவறான பேருந்தில் ஏறிவிட்டேன்" என்று சொல்லிவிட்டுக் கீழே இறங்க ஆரம்பித்தான்.

எந்தப் பேருந்து சரியானது, எது தவறானது என்பதெல்லாம் குடிகாரர்களுக்குத் தெரியாது. தங்கள் வாழ்வை விதவிதமான சிக்கல்களுக்கு

**தங்கள் வாழ்வை விதவிதமான சிக்கல்களுக்கு ஆட்படுத்திக் கொண்டு, சூழ்நிலைக் கைதிகளாய் வாழ்பவர்கள், தங்கள் வாழ்வை திறம்பட நிர்வகித்து விரும்பும் திசையில் திட்டமிட்டு பயணம் செய்பவர்களைப் பார்த்து, "இவர்கள் தவறானவர்கள்" என்று பேசுகிறார்கள்.**

ஆட்படுத்திக் கொண்டு, சூழ்நிலைக் கைதிகளாய் வாழ்பவர்கள், தங்கள் வாழ்வை திறம்பட நிர்வகித்து விரும்பும் திசையில் திட்டமிட்டு பயணம் செய்பவர்களைப் பார்த்து, "இவர்கள் தவறானவர்கள்" என்று பேசுகிறார்கள். இன்றைய உலகில் 0.1% பேர்தான் ஆன்மீகப் பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் இருப்பவர்கள். 50% பேர் இயந்திரங்கள் போல இடையறாமல் செயல்பட்டு, தங்கள் செயல்களாலேயே உலகுக்குக் கேடு விளைவிக்கிறார்கள்.

மனித சுயநலத்தின் காரணமாய், பூமி வேண்டாத பாரங்களை சுமந்து கொண்டிருக்கிறது. 50% பேரையாவது ஆன்மீக நெறியில் ஈடுபடுத்தினால் இந்த உலகம் காப்பாற்றப்படும். தங்களை விடுவித்துக் கொண்டவர்கள் தங்களுக்கோ, சமூகத்திற்கோ, உலகிற்கோ சுற்றுச் சூழலுக்கோ கேடு விளைவிப்பதில்லை.

சிறிது கூட விழிப்புணர்வின்றி, தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், மற்றவர்கள் செய்வதையெல்லாம்,தாங்களும்செய்ய முற்பட்டவர்கள் பூமி உருண்டைக்கு மிகுந்த சேதம் விளைவிக்கிறார்கள். இத்தகைய செயல்களிலிருந்து விடுபடுவதொன்றும் தவறானதல்ல.

அதுவே, மனிதகுலத்திற்கு செய்கிற பெரும் உதவி. இந்த உலகம் எப்போதுமே அற்புதமானதாக இருந்து வந்திருக்கிறது.

தன்னலம் மிக்க சிலரின் அடாவடி செயல்கள், உலகுக்கு நன்மை செய்வதாய் நினைத்துக் கொண்டு அவர்கள் செய்யும் தீமைகள், இவைதான் உலகிற்கு எதிரானவற்றை ஏற்படுத்தி வருகின்றன.

மனிதகுலம் நாகரீகமடைந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆன பிறகும் மனிதகுலம் வாழ்வதற்காக எத்தனையோ விலங்குகளை வேட்டையாடி, சிலசமயம் மனிதர்களையே வேட்டையாடிய பிறகும் மனிதகுலம் நன்மையடையவில்லை.

மனிதன், வெளிச்சூழலை சரிசெய்ய விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றின் உதவிகொண்டு என்னென்னவோ செய்துவிட்டான். ஆனால் அவன் உள்தன்மையில் நாகரீகம் அடையவில்லை.

உள்நிலையில் கவனம் செலுத்தி உரிய மாற்றங்களை ஏற்படுத்தினால் மட்டுமே மனிதன் உயர்நிலை அடைய இயலும். அத்தகைய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழியே யோகா, தியானம் ஆகியவை.

## அரோமா பேக்கரியின் 30வது கிளை திறப்பு



புதிய கிளையை ரிப்பன் வெட்டி திறந்து வைக்கிறார் பொன்னுசாமி.

தி கோவை மெயில்

அரோமா பேக்கரியின் 30 வது கிளை கோவை சௌரிபாளையம், உப்பிலிபாளையம் பிரதான சாலையில் அண்மையில் துவங்கப்பட்டது.

கோவையில் கேக் மற்றும் ஸ்நாக்ஸ், பால் பொருட்களுக்கென தனி முத்திரை பதித்து வரும் அரோமா பேக்கரி, நகரின் முக்கிய பகுதிகளில் தனது கிளைகளை விரிவுப்படுத்தி வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பையும், ஆதரவையும் பெற்று வருகிறது.

அந்த வகையில், இதன் புதிய கிளை கோவை சௌரிபாளையம், உப்பிலி பாளையம் பிரதான சாலையில் ஞாயிற்று கிழமை துவங்கப்பட்டது. அரோமா பேக்கரியின் நிர்வாக இயக்குநர் பொன்னுசாமி விழாவிற்கு தலைமையேற்று ரிப்பன் வெட்டி புதிய கிளையை திறந்து வைத்தார்.

அரோமா பேக்கரியில் செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும், குறைந்த விலை கொண்டதாக இருக்கும் எனவும், மக்கள் நல்ல ஆதரவை அளித்து வருவதாகவும் இதன் நிர்வாக இயக்குநர் பொன்னுசாமி தெரிவித்தார்.

மேலும், இப்புதிய கிளையில் அனைத்து வகையான க்ரீம் கேக்குகள், ஸ்வீட்ஸ் மற்றும் கார வகைகள், பால் பொருட்கள் என அரோமா பேக்கரியின் அனைத்து வகையான ஸ்நாக்ஸ் வகைகளும் உள்ளன.

## புதிய கல்விக் கொள்கையால் உலக அரங்கில் முன்னேற முடியும்

### - நேரு கல்லூரி வெள்ளி விழாவில் தமிழிசை சௌந்தரராஜன் பேச்சு



வெள்ளி விழா கொண்டாட்டத்தில், ஒரு ரூபாய் இட்லி பாட்டி கமலாத்தாளுக்கு விருது வழங்கப்பட்ட போது.

தி கோவை மெயில்

நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 25 ம் ஆண்டு வெள்ளி விழா கொண்டாட்டம் பி.கே. தாஸ் நினைவு கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக தெலுங்கானா மாநிலத்தின் கவர்னரும், புதுச்சேரி மாநிலத்தின் துணை நிலை ஆளுநருமான தமிழிசை சௌந்தரராஜன் கலந்து கொண்டார்.

கல்லூரியின் முதல்வர் அனிருதன் வரவேற்புரை ஆற்றினார். நேரு கல்வி குழுமத்தின் நிர்வாக அறங்காவலர் வழக்கறிஞர் கிருஷ்ணதாஸ் தலைமை தாங்கினார். நேரு கல்வி குழுமத்தின் தலைமை நிர்வாக அதிகாரியும், செயலாளருமான கிருஷ்ணகுமார் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவில் சமூக முன்னேற்றத்திற்காக செயல் பட்டுக் கொண்டிருக்கும் 25 சமூகப்பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் வணிகவியல் துறை மற்றும் சமூகப்பணியியல் துறை சார்பாக விருதுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் தமிழிசை சௌந்தரராஜன் பேசியதாவது: கல்லூரி நடத்துவதில் அனைத்து சவால்களையும் சந்தித்து 25வது ஆண்டு விழா கொண்டாடுவது சாதாரணம் அல்ல.

நான் மருத்துவர்கள் மாநாடு, விஞ்ஞானிகள் மற்றும் அரசியல் மாநாடுகளில் பேசும்போது தயக்கம் ஏற்பட்டதில்லை. ஆனால் மாணவர்கள் முன் பேசுவதற்கு தயக்கம் உள்ளது. இன்றைய காலகட்டத்து மாணவர்கள் அறிவாளிகளாக உள்ளனர். அறிவாற்றலில் சிறந்து விளங்குகின்றனர்.

வாழ்க்கையில் நிறைய பேர் தோற்றிருக்கிறார்கள். ஆனால், தன்னம்பிக்கையும், குறிக்கோளும் இருக்க வேண்டும். மற்றவர்கள் கண்களுக்காக மேம்போக்குவாதிகள், முற்போக்குவாதிகள் என்றெல்லாம் வேண்டாம். நீ எப்படி வேண்டுமானாலும் இரு அது உன் உரிமை என்பார்கள், கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் எனப் பேசினார்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது: புதிய கல்விக் கொள்கையில் நல்ல விஷயங்கள் உள்ளது. எல்லா மாநிலங்களும் இதை பின்பற்ற வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து. புதிய கல்விக் கொள்கையால் உலக அரங்கில் முன்னேற முடியும்.

தாய்மொழிக் கல்வி, குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து ஆகியவை புதிய கல்விக் கொள்கையில் உள்ளது. கொள்கை மாறுபாடு என்று ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதைவிட இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்

## ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் பட்டமளிப்பு விழா




பட்டம் பெற்ற மாணவர்களுடன் (இடமிருந்து 5 வது) சுந்தர், சுஹாஷினி ஜே நக்டா, தீபாநந்தன்

தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 17வது பட்டமளிப்பு விழா எஸ்.என்.ஆர் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

எஸ்.என்.ஆர் அறக் கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலரான சுந்தர், கல்லூரி முதல்வர் டாக்டர். தீபாநந்தன் ஆகியோர் பங்கேற்றனர். பல்வேறு துறைத் தலைவர்கள் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டனர். இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் பட்டமளிப்பு விழாவை துவங்கி வைத்தார். நிர்வாக அறங்காவலர் சுந்தர் பட்டமளிப்பு விழாவில் மாணவர்களிடம் கூறியதாவது, பட்டதாரிகள் மற்றும் பதக்கம் வென்றவர்களை வாழ்த்தினார். மேலும் கல்வியின் முக்கியத்துவத்தையும் வாழ்க்கையின் மதிப்புகளை அதிகரிப்பதற்கான செயல்முறையைத் தொடர்வதையும் அறிவுறுத்தினார். மேலும் மாணவர்கள் தங்கள் திறமைகளை மேம்படுத்தி வெற்றிபெற வேண்டும் என வலியுறுத்தினார்.

தலைமை விருந்தினரான மும்பை நாயர் பல் மருத்துவக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் டாக்டர் சுஹாஷினி ஜே நக்டா, தனது பட்டமளிப்பு விழா உரையில், பட்டதாரிகள் தொழிலை விட அதிகமாக சாதிக்க விரும்பும் போது, பல்வேறு தொழில் வாய்ப்புகளை கவனிக்க வேண்டும் என்றார். திறன் மேம்படுத்தல் மற்றும் மனதில் இளமையாக இருக்க வாழ்நாள் முழுவதும் தொடர கற்றல் செயல்முறையை தேவை என கூறினார்.

10 துறைகளில் முதலிடம் பெற்றவர்கள் தலைமை விருந்தினரிடமிருந்து பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களைப் பெற்றனர் மற்றும் 96 பி.டி.எஸ் பட்டதாரிகள், 1 எம்.டி.எஸ் முதுகலை பட்டதாரிகள் தங்கள் பட்டப்படிப்புச் சான்றிதழ்களைப் பெற்றனர்.

டாக்டர் ஹரி சக்ரிகா, சிறந்த மாணவர் விருது உட்பட 4 தங்கப் பதக்கங்களை வென்றார்.

## அரசுப்பள்ளி ஆய்வகம் புதுப்பிப்பு

தி கோவை மெயில்

நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் நகராட்சியில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் இயற்பியல் மற்றும் வேதியல் ஆய்வுக்கூடங்கள், ஆற்றல் பவுண்டேஷன் சார்பில் சீரமைத்து புதுப்பித்து ஒப்படைக்கப்பட்டது.

மாணவர்களின் பயன் பாட்டிற்காக நகராட்சி மன்ற நிர்வாகிகள், ஆற்றல் பவுண்டேஷன் தலைவர் ஆற்றல் அசோக்குமார் முன்னிலையில் மாணவிகள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இதில் தலைமையாசிரியர் சரஸ்வதி, நகராட்சி மன்றத் தலைவர் செல்வராஜ், நகராட்சி மன்ற துணை தலைவர் பாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் சௌதாபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் சத்துணவு கூடம் சீரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப் பட்டது. இதனை சட்டமன்ற உறுப்பினர் தங்கமணி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் கிருஷ்ணன், ஊராட்சி மன்றத் தலைவர் தேவி மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தேர்தலில் சமூக வலைதளங்கள் ஆதிக்கம் செலுத்துவதை தடுக்க வேண்டும்

### - சோனியா காந்தி கோரிக்கை

தி கோவை மெயில்



உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தேர்தல் அரசியலில், பேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடக நிறுவனங்களின் தலையீடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கு மாறு மக்களவையில் காங்கிரஸ் இடைக்காலத் தலைவர் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

மக்களவையில் சோனியா காந்தி பேசுகையில், நமது ஜனநாயகத்தை கைப்பற்ற, சமூக ஊடகங்களை துஷ்பிரயோகம் செய்யும் அபாயம் அதிகரித்து வருகிறது. இளைஞர்கள் சிந்தனையில் வெறுப்புணர்வை ஏற் படுத்தும் தவறான தகவல்கள் ஊடகங்கள் மூலம் பரப்பப்படுவதாக சோனியா காந்தி குற்றம் சாட்டினார்.

போலி விளம்பரங்களை செய்தி நிறுவனங்கள் தரும் செய்திகள் போல பேஸ் புக், ட்விட்டர் போன்ற சமூக ஊடகங்களில் பதிவேற்றுகின்றனர். சமூக ஊடக நிறுவனங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் சமமான இடத்தை வழங்குவதில்லை என்பது ஏற்கெனவே பலமுறை பொது மக்களின் கவனத்திற்கு வந்திருக்கிறது.

இந்தியாவில் சமூக நல்லிணக் கத்தை சீர்குலைக்கும் வகையில் சமூக ஊடகங்கள் செல்வாக்கு செலுத்துவதை தடுக்க வேண்டும்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாட்டின் தேர்தல் அரசியலில், பேஸ்புக் மற்றும் பிற சமூக ஊடக நிறுவனங்களின் தலையீடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்வதாக தெரிவித்துள்ளார்.

இது கட்சிகளுக்கும் அரசியலுக்கும் அப்பாற் பட்டது. யார் ஆட்சியில் இருந்தாலும் நமது ஜனநாயகத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் பாது காக்க வேண்டும். இந்திய ஜனநாயகத்தில், சமூக ஊடகங்கள் தலையிடுவதை தடுத்த வேண்டும் என சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

## கே.பி.ஆர் கல்லூரியில் தொழில்நுட்பக் கருத்தரங்கு



தொழில்நுட்பக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினர் மோகனசுந்தரம் அவர்களுக்கு, அகிலா நினைவு பரிசினை வழங்குகிறார்.

தி கோவை மெயில்

கே.பி.ஆர்.பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் துறையின் சார்பாக 'NETSE-22' என்ற தலைப்பில் தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது.

இதில் கேலிபர் இன்டர் கனெக்ட் சொலுஷன்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் மோகனசுந்தரம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்து அவர் உரையாற்றும்போது, மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் துறை சார்ந்த நிறுவனங்களுக்கு வேலைக்கு வரும் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் திறமைகள் மற்றும் அங்குள்ள நவீன தொழில்நுட்பங்கள், இத்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் பற்றி எடுத்துரைத்தார்.

கருத்தரங்கில் கல்லூரியின் முதல்வர் அகிலா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறமைகளை பற்றி கூறினார். கல்லூரியின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பியல் துறையின் தலைவர் கதிர்வேலு இந்த கருத்தரங்கின் முக்கியத்துவம் மற்றும் பலன்களைப் பற்றி பேசினார்.

இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு பொறியியல் கல்லூரிகளிலிருந்து 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் அனைத்து தொழில்நுட்பம் சார்ந்த போட்டிகளிலும் கலந்து கொண்டனர்.

# மின்னும் நட்சத்திரம்









**ஆர்.பொன்னுசாமி, நிர்வாக இயக்குநர், அரோமா பேக்கரி**

படங்கள் : சதிஷ் பாபு

டி-20 கிரிக்கெட்: சாம்பியன் பட்டம் வென்ற

# ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி



பாரதியார் பல்கலைக்கழக 'ஏ' மண்டல டிவென்டி கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணியினர்.

தி கோவை மெயில்

ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரி, மண்டல அளவிலான டிவென்டி 20 கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

பாரதியார் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட கோவை, நீலகிரி மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளைச் சேர்ந்த அணிகளுக்கு இடையிலான 'ஏ' மண்டல டிவென்டி 20 கிரிக்கெட் போட்டி, ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் மார்ச் 9 ம் தேதி முதல் 15ம் தேதி வரை நடைபெற்றது. இதில் 18 அணிகள் கலந்து கொண்டு விளையாடின. இதன் இறுதிப் போட்டிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணியும், சி.எம்.எஸ். அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி அணியும் தகுதி பெற்றன. இப்போட்டியில் முதலில் களமிறங்கிய ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு, 226 ரன்கள் குவித்தது. அதிரடியாக விளையாடிய விஜய் அபிமன்யு 55 பந்துகளில் 110 ரன்களும், ஸ்ரீராம் ஈஸ்வர் 43 பந்துகளில் 74 ரன்களும் விளாசினர்.

227 ரன்களை இலக்காகக் கொண்டு விளையாடிய சி.எம்.எஸ். அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி அணி, 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 101 ரன்கள் மட்டுமே தோல்வியடைந்தது.

இதன்மூலம் பாரதியார் பல்கலைக்கழக 'ஏ' மண்டல டிவென்டி20 கிரிக்கெட் போட்டியின் சாம்பியன் பட்டத்தை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணி கைப்பற்றியது.

சாம்பியன் பட்டம் வென்ற அணியினரை எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணசுவாமி, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் சிவக்குமார், உடற்கல்வி இயக்குநர் வடிவேலு ஆகியோர் பாராட்டினர்.

# ரோட்டரி சார்பில் விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி

தி கோவை மெயில்

ரோட்டரி கிளப் ஆப் கோவை சார்பாக காரமடை தோலம் பாளையம் கிராமத்தை சேர்ந்த பழங்குடியின விவசாயி களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட ஆட்சியர் சமீரன் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினராக கோவை மாவட்டத்தின் இணை வேளாண் இயக்குனர் சித்ரா தேவி, வழக்கறிஞர் சுந்தர வடிவேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் பெண் குழந்தைகளுக்கான உதான் (UDAAN) திட்டத்தின் துவக்க விழா நடைபெற்றது. இதில் அரசு பள்ளி மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு தேவையான கல்வி உப கரணங்களை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இதனை தொடர்ந்து, பழங்குடியின விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களையும் அவர் வழங்கினார்.




பழங்குடியின விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்குகிறார் மாவட்ட ஆட்சியர் சமீரன்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சமீரன் பேசுகையில், இரண்டு முக்கியமான துறைகளை ஊக்குவிக்கும் விதமாக இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது. இது ஒரு சிறந்த முயற்சி என கூறினார். நாட்டின் பாரம்பரியமும், பண்பாடும் கொண்ட விவசாயத்தை ஊக்குவிக்கும் வகையில் விவசாய கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

ரோட்டரியின் செயல் பாடுகள் நகர்புறம் மட்டுமில்லாமல் கிராமம், பழங்குடியின மக்கள் வரை சென்றுள்ளது பாராட்டத்தக்கது. சவாலான, இக்கட்டான சூழல் இருந்தாலும் விவசாயிகளுக்கு ரோட்டரி அமைப்பு உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அவர் முன்வைத்தார்.

ரோட்டரி 3201 மாவட்ட தலைவர் சுவாமிநாதன், செயலாளர் மோகனசுந்தரம், கம்யூனிட்டி சர்விஸ் தலைவர் சன்டிகோ ஜேசு ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# ஒன் நேஷன் என்று பேசும் நீங்கள் ஏன் பாகுபாடு பார்க்கிறீர்கள்?

## - மக்களவையில் கனிமொழி கேள்வி



தி கோவை மெயில்

தெற்கு ரயில்வேக்கு ரூ.59 கோடி மட்டும் ஒதுக்கியுள்ள ஒன்றிய அரசு, வடக்கு ரயில்வேக்கு ரூ.13,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்றும் 'One Nation' என்று எப்போதும் பேசும் நீங்கள் வடக்கு, தெற்கு பாகுபாடு பார்க்கலாமா? என்றும் மக்களவையில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜனவரி 31 ஆம் தேதி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உரையுடன் தொடங்கியது. பிப்ரவரி 1 ஆம் தேதி நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஒன்றிய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது அமர்வு 16 ஆம் தேதி தொடங்கியது. இது, வரும் ஏப்ரல் 8ம் தேதி வரை நடைபெற உள்ளது. மக்களவையின் 2வது அமர்வில் ரயில்வே துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.

ரயில்வே பட்ஜெட் மீதான விவாதத்தில் திமுக எம்.பி. கனிமொழி பேசியதாவது: லாபத்தில் இயங்கும் ரயில்களை தனியாருக்கு தாரை வார்த்துவிட்டு நஷ்டத்தில் இயங்கும் ரயில்களை மட்டுமே ஒன்றிய அரசு இயக்குகிறது. ரயில்வே துறையை ஒன்றிய அரசு புறக்கணிக்கிறது. முந்தைய அரசு மீது பழி போடுவது ஏற்கத்தக்கது அல்ல.

வடக்கு ரயில்வேக்கு ரூ.13,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள ஒன்றிய அரசு, தெற்கு ரயில்வேக்கு ரூ.59 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளது. 'One Nation' என்று பேசும் நீங்கள் ரயில்வே நிதி ஒதுக்கீட்டில் ஏன் இந்த பாகுபாடு பார்க்கிறீர்கள். கடந்த 4 ஆண்டுகளில் தென்னிந்திய ரயில்வே திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த தொகை வெறும் ரூ. 308 கோடி மட்டுமே.

ரயில்வே துறைகளில் தென்னிந்தியர்களுக்கு வேலை வாய்ப்புகள் திட்டமிட்டு மறுக்கப் படுகின்றன. மொழி தெரியாத பணியாளர்களால் மக்களின் உயிருக்கே பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது. இந்தியா முழுக்க ரயில்வே துறையில் காலியாக இருக்கும் 2.65 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியிடங்களையும் நிரப்பாமல் அப்படியே வைத்து இருக்கிறது. கொரோனாவால் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்கென பிரத்தியேகமாக இணைக்கப்பட்ட ரயில் பெட்டிகள் நீக்கப்பட்டது. அவர்களுக்கு ஏதுவாக ரயில் நிலையங்கள் அமைக்கபட வேண்டும்.

கடந்த 3 ஆண்டுகளாக ரயில்வே துறையின் நிதிச் செயல்பாடுகள், குறைத்து ஒதுக்கப்பட்ட நிதியைக் கூட முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. சரி செய்யப்பட வேண்டியது நிறைய இருப்பினும், ஏன் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தாமல் இருக்கிறது என அவர் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

# சிறந்த பெண் சாதனையாளர் விருது

இந்திய மருத்துவ அமைப்பு மற்றும் மகளிர் மருத்துவ விங் என்ற அமைப்புகள் இணைந்து எஸ்.என்.எஸ் கல்வி குழுமத்தின் தாளாளர் இராஜலட்சுமி அவர்களுக்கு சிறந்த பெண் சாதனையாளர் விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.




## மார்ட்டின் அறக்கட்டளை சார்பில்

# ரூ.3 கோடி செலவில் அரசுப் பள்ளி சீரமைப்பு



மார்ட்டின் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லீமா ரோஸ் மார்ட்டின் பள்ளியை மேம்படுத்தும் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுகிறார்.

தி கோவை மெயில்

கோவையில் மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து மாணவ, மாணவிகள் பயிலும் அரசு துவக்கப்பள்ளியை தத்தெடுத்த மார்ட்டின் அறக்கட்டளை ரூபாய் 3 கோடி செலவில் பள்ளியை மேம்படுத்தும் பணிகளை தொடங்கியுள்ளது.

கோவையை சேர்ந்த மார்ட்டின் குரூப் ஆப் நிறுவனத்தினர் தங்களது அறக்கட்டளை வாயிலாக மருத்துவம், கல்வி மற்றும் பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவது உள்ளிட்ட உதவிகளை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் கோவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள அரசு ஒன்றிய துவக்கபள்ளியை தத்தெடுத்த மார்ட்டின் அறக்கட்டளையினர் பள்ளிக்கு தேவையான கழிப்பறை வசதிகள், நவீன கணிணி லேப், அறிவியல் லேப் என ரூபாய் மூன்று கோடி செலவில் கட்டமைப்பு பணிகளை அண்மையில் துவக்கினர். மார்ட்டின் சேரிடப்பில் டிரஸ்ட் நிர்வாக அறங்காவலர் லீமா ரோஸ் மார்ட்டின் தலைமையில் இந்த நிகழ்ச்சியின் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

மார்ட்டின் குழுமத்தின் மேலாண் இயக்குனர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின், முதன்மை செயல் அதிகாரி ஜார்ஜ் மார்ஷல் மற்றும் கோவை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிர்வாக அறங்காவலர் லீமா ரோஸ் மார்ட்டின் கூறுகையில்: பல்வேறு பொது சேவைகளில் ஈடுபட்டு வரும் எங்களது மார்ட்டின் குரூப் ஒரு புதிய முயற்சியாக கோவை கவுண்டம்பாளையத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை தத்தெடுப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

ரூ.3 கோடி மதிப்பில் இந்த பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி தரப் போகிறோம். புதிய ஸ்மார்ட் கிளாஸ் ரூம், கணினி வசதியுடன் கூடிய ஆய்வகம், அறிவியல் ஆய்வகம், விளையாட்டு மைதானம், கிட்சன், உணவருந்தும் அறை, கழிப்பிடம் என பல வசதிகளுடன் இவை அனைத்தையும் புதியதாக கட்டிக் கொடுக்கிறோம்.மேலும் பள்ளியின் பழைய கட்டிடம், அங்கன்வாடி மையம் மற்றும் பழைய வகுப்பறைகளை புதுப்பித்து சீரமைத்து கொடுக்கிறோம். ஸ்மார்ட் கிளாஸ் ரூம் மூலம் மாணவர்களுக்கு கல்வி மீதான ஆர்வம் கூடும். நிச்சயமாக வகுப்பறைகளில் இது ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வரும் என எதிர்பார்க்கிறோம். மாணவர்களுக்கு கற்பித்தல் முறையை எளிதாக்குவதோடு அவர்களின் புரிதல் திறனையும் இதன் மூலம் அதிகரிக்க முடியும்.



அடிக்கல் நாட்டு நிகழ்வின் போது எடுக்கப்பட்ட குழு புகைப்படம்

இது போன்ற நவீன வசதிகள் மூலம் இப்பள்ளியில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு தரமான கல்வி கிடைக்கும் என்று நம்புகிறோம். மாணவர்கள் எதிர்காலம் குறித்த பல கனவுகளோடு இருப்பார்கள். அவர்களின் எண்ணங்களை ஒருநிலைப்படுத்தி நன்றாக படித்து நல்ல நிலைக்கு வருவார்கள் என நம்புகிறோம்.

தற்போது 465 மாணவர்கள் இங்கு படிக்கின்றனர். இன்னும் ஆயிரக்கணக்கில் மாணவர்கள் வந்து இந்த பள்ளியில் படிக்க வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக கவுண்டம்பாளையம் துவக்கப்பள்ளி இருக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.


YAMAHA
RACING
The call of the BLUE
சிங்காநல்லூரில்
புதிய
ஆர்பி யமஹா
ஷோரூம் திறப்பு விழா
நாள்:
23.03.22
புதன்கிழமை
மாலை 5.30 மணி
அனைவரும் வருக..
ஆதரவு தருக...
சர்வீஸ் வசதியும் உண்டு
Terms & Conditions Apply*
திறப்பு விழா சிறப்பு சலுகை உண்டு
திருச்சி ரோடு, உழவர் சந்தை எதிரில், ICICI பேங்க் அருகில்
ORPI
98430 12033, 98430 30995